மனனம் செய்ய இந்த வார வசனம்:

**"...நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக"**

(மாற்கு 12, 29)

அனைவருக்கும் தெரிந்த கட்டளையை இணைச்சட்ட நூலிருந்து இயேசு சுட்டுகிறார். 'உன் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு செலுத்துவது!' மேலும் இயேசு, 'தன்னிடம் அன்பு கொள்வது போல் அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்துவதும்' என்றார். மறைநூல் அறிஞரும் ஒப்புக்கொண்டார். 'நீர் இறையாட்சியினின்று தொலைவில் இல்லை' இயேசு கூறினார்.

**அன்பே நற்செய்தியின் மையம்.** நவம்பர் முதல் தேதி அனைத்துப் புனிதர் நாளைக் கொண்டாடும் போது போலந்து நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்கக் குரு புனித மெக்ஸ்மில்லியன் கொல்பேயை நினைவுகூர்வோம். நாசி கொலைக்களத்தில் முன்பின் தெரியாத ஒருவருக்காக முன்வந்து மரணத்தைத் தழுவிக் கொண்டார். இளம் வயது முதல் கன்னித்தாய் உடன் அணுக்கமாக இருந்தார். ஒரு நாள் கனவில் தோன்றிய மாதா, இரண்டு கிரீடங்களைக் காட்டினார். ஒன்று சிவப்பு (வேதசாட்சிக்குரியது) மன்றொன்று வெள்ளை (புனிதத்திற்குரியது). ஒன்றைத் தேர்வு செய்யும்படி அவர் சொன்னார். புனித மெக்ஸ்மில்லியன் வாழ்க்கையில் இரண்டையும் தேர்வு செய்தார். கிறிஸ்துவுக்கு ஏற்ற வாழ்க்கையை வாழ்ந்து நம்பிக்கையோடு இறந்தார்.

புனித சியான்னா கெத்ரினும் நமது நினைவுக்கு வருகிறார். தரும் பற்பல தடைகளைச் சமாளித்து மீட்புக்காக துன்புறுவதை புரிந்து கொண்ட புனிதர்களில் இவரும் அடங்குவார். நற்கருணை நாதர் மீதான அவரது அளவற்ற அன்பு, ஏழைகளுக்குக் குறிப்பாக கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ இட்டுச் சென்றது. அவ்வாறே கல்கத்தா அன்னை திரேசாவும். நற்கருணை நாதர் மீதான அவரது அன்பு. சேறியில் வாழும் மக்களிடம் கூட்டிச் சென்றது. அங்கு நோயினால் அவதிப்படுவோரையும் சாகும் நிலையிலுள்ளவர்களையும் கவனித்து, அருள் நிறைந்த மரணத்தை அடைய வழி செய்தார்.

இறையரசுக்கான பாதையைக் காட்டிய கிறிஸ்துவின் நற்கருணையில் இந்த புனிதர்கள் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து மரித்தனர். மனுக்குலத் துன்பத்திற்கு அப்பால், மரணம் நிலைவாழ்வுக்கான வாசல் என்பதை இவர்கள் அறிந்திருந்தனர். இயேசுவில் நம்பிக்கை கொண்டு, பிரதிபலனைப் பாராமல் அவரது அன்புக் கட்டளையைக் கடைபிடிப்போர் அவரோடு இருப்பர் என்பது அவர் வாக்குறுதி.

என் மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து குடிகொள்வோம் ✣

**இன்றைய வாசகங்கள்:**

இச. 6, 2-6;
திபா. 17, 2-4. 47. 51;
எபி. 7, 23-28;
மாற்கு 12, 28-34.

INTERNAL CIRCULATION ONLY
BUL 44/2021
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

31 அக்டோபர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 31 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:
**ஆழத்தில் போடுங்கள்**

# அன்பு இறையரசுக்கான வாசல்



கடந்த நான்கு வாரங்களாக மாற்கு அதிகாரம் 10 இல் இருந்து இறையரசின் மறைபொருள் பற்றிய சில பண்புகளைக் கண்டோம். கனிவு, அருள், இரக்கம், நம்பிக்கை. இந்த எல்லாப் பண்புகளும் அன்பு என்பதில் அடங்குகின்றன. அதுவே இயேசு இறையரசுக்குக் காட்டியப் பாதை.

இயேசு தமது இறுதிப்பயணத்தின் கடைசி கட்டத்திற்குள் நுழைகிறார். கட்டளைகளில் எந்த கட்டளை முதன்மையானது என மறைநூல் அறிஞர் கேட்கிறார்.

Image: ©123rf.com